www.facebook.com / newsplustamil www.newsplus.lk twitter.com/newsplus.lk

NEWS PLUS

உன்னதமான பயணத்தின் அடையாளம்

06TH FEBRUARY 2023 - MONDAY Pages - 08 E Paper - # 027 / Y 01 / 2023

Web: WWW.NEWSPLUS.LK E-mail: editor@newsplus.lk

## அரசியலமைப்பு பேரவை இன்று கூடும்

அரசியலமைப்பு பேரவை இன்று (06) மீண்டும் கூடவுள்ளது.
சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நாளை பிற்பகல் 03 மணிக்கு சட்ட பேரவை கூடவுள்ளதாக 02 »»»

## பர்வீஸ் முஷாரப் காலமானார்

பாகிஸ்தான் முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரப் உடல் நலக் குறைவால் காலமானார். 02 »»»



# 13 நடைமுறைக்குவரும் பட்சத்தில் முஸ்லிம்களுக்கும் சமஉரிமை வேண்டும்

### எமது அரசியல் தலைவர்களும், உலமாக்களும் இதற்காக கைகோர்க்கவும்

(அஷ்ரப் ஏ சமத்)

13வது அரசியல் சரத்து வட கிழக்கில் அமுல்படுத்துப்படுமேயானால் எமது முஸ்லிம் சமுகத்திற்குரிய சகல உரிமைகளையும் நாமும் சமமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். இதற்காக நமது முஸ்லிம சமூகமும் எமது முஸ்லிம் அரசியல் தலைவர்களும் உலமாகளும் சிந்தித்து ஒன்றினைந்து நாம் காய் நகர்த்துதல் வேண்டும்.
இவ்வாறு அமைச்சர் சுற்றாடல்துறை அமைச்சர் 03 »»»



சுதந்திர தின நிகழ்வில் அமைச்சர் ஹாபிஸ் அறைகூவல்



# 13 இற்கு கடும் எதிர்ப்பு: தனிமைப்படும் ரணில்


### ஆளுங் கட்சிக்குள்ளும் பெருகிவரும் முரண்பாடு

(சுஐப் எம்,காசிம்)

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்த த்தை அமுல்படுத்தும் ஜனாதிபதி யின் முயற்சிகளுக்கு எதிர்ப்புக்கள், எழுந்துள்ளன.இதனால், ரணில்விக்ரமசிங்க அரசியலில் தனிமைப்படும் நிலைமைகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. இதை, அமுல்படு த்தும் அதிகாரம் அரசியலமைப்பில் அவருக்கு இருந்தாலும், பௌத்த மத உயர்பீடங்களின் எதிர்ப்பைச் சமாளிப் பதிலேயே அவர் தனிமைப்படும் பரிதாபம் ஏற்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளால் கூட முடியாமல் போனதை,முடித்து வைக்கும்

அளவுக்கு,இவரிடம் என்ன தைரியம் இருக்கிறது என்பதே, இன்றைய எதிர்ப்புக்களும்,எதிர்பார்ப் புக்களுமாகும். ரணில்விக்ரமசிங்க எடுத்துள்ள இந்த முயற்சியால், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குள்ளும் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. 02 »»»



## உள்ளூராட்சி தேர்தல் 8 இல் இறுதித் தீர்மானம்

உள்ளூராாட்சித் தேர்தல் நடைபெறுமா, இல்லையா? என்பது சம்பந்தமாக முக்கியமான தீர்மானம் ஒன்று எதிர்வரும் 08ஆம் திகதி எடுக்கப்படலாம் எனத் தெரிய வருகின்றது.

பாராளுமன்றம் 08ஆம் 02 »»»

## பாராளுமன்ற கூட்டத்தொடர் சஜித் அணி பகிஷ்கரிப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

பாராளுமன்ற கூட்டத் தொடர் எதிர்வரும் 08ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. ஜனாதிபதி ரணில் 02 »»»

## உயர்ந்தது எரிவாயு விலை




லிட்ரோ சமையல் எரிவாயு விலை நேற்று (05) நள்ளிரவு முதல் அதிகரிக் கப்பட்டதாக லிட்ரோ நிறுவனம் 02 »»»

## ஒன்பதன்று பௌசியின் சத்தியப் பிரமாணம்



கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசி எதிர்வரும் ஒன்பதாம் திகதி பாராளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் 02 »»»



## சந்திம வீரக்கொடி சஜித்துடன் இணைவு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் மேடையில் இணைந்துள்ளார்.
எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் 02 »»»

## அடிமைத்தனத்திலிருந்து மக்களை விடுவிப்போம்

### பாணந்துறைக் கூட்டத்தில் சஜித் தெரிவிப்பு



தற்போதைய அரசாங்கம் தவறான கொள்கைகளைப் பின்பற்றி நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சிப்பதாகவும், இவர்களின் இத்தகைய செயற்பாடுகளினால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதிகரித்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.
ராஜபக்ச குடும்பம் இந்நாட்டை அழித்து வறிய நிலைக்கு இட்டுச் சென்றதாகவும், சிறு குழந்தை முதல் முதியவர் வரை,அரச ஊழியர் முதல் கூலித் தொழிலாளி வரை அனைவரினதும் 02 »»»

## முதலாம்தர ஆசிரியர்களுக்கு ஆங்கில பேச்சுப் பயிற்சி

முதலாம் தர வகுப்புக்கு போதிக்கும் ஆசிரியர்களுக்கு இம்மாதம் முதல் ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.
செயலாளர் சகல கல்விப் பணிப்பாளர்களுக்கும் இது தொடர்பாக பணிப்புரை ஒன்றை வழங்கி இருக்கின்றார்.
இம்மாதம் ஆரம்பமாகும் இந்தப் பயிற்சி மார்ச் மாதத்திற்குள் 02 »»»

## முஸ்லிம் பாடசாலைகளுக்கு நாளை முதல் விடுமுறை

முஸ்லிம் பாடசாலைகளுக்கான மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டம் எதிர்வரும் திங்கட்கிழமையோடு முடிவடைவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.
திருத்தப்பட்ட தவணை அட்டவணையின் படி, திங்கள் பாடசாலை நடைபெற்று, விடுமுறை ஆரம்பமாகும். மூன்றாம் தவணையின் மூன்றாம் கட்டம் எதிர்வரும் பெப்ரவரி 03 »»»

# இலங்கைக் குடியரசு முன்னேற்றமும் செழிப்பும் பெற வாழ்த்துகிறேன்
# சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல்-கஹ்தானி



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இலங்கைக் குடியரசு மேலும் முன்னேற்றமும் செழிப்பும் பெற வாழ்த்துகிறேன் என சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல்-கஹ்தானி தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வெளியீட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோர் உட்பட இலங்கை அரசு மற்றும் அதன் நேசமிகு குடிமக்களுக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, இலங்கைக் குடியரசு மேலும் முன்னேற்றமும் செழிப்பும் பெற வேண்டும் என வாழ்த்துகிறேன் எனவும் தெரிவித்துள்ளார்.






75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு தர்கா நகர் அல் ஹம்ரா மகா வித்தியாலயம் ஏற்பாடு செய்த சுதந்திர தின நிகழ்வு நேற்று தர்கா நகர் பாகீர் மாகர் விளையாட்டு அரங்கில் அதிபர் எம் எம் எம் பஸ்லியா தலைமையில் மிக விமர்சையாக நடைபெற்றது. தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் தேசமான்ய கலாநிதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆளீம் பிரதம அதீதியாக கலந்து கொண்டார். தேசிய கொடி ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமானது. பிரதம அதிதி தேசிய கொடியை ஏற்றி வைக்க பாடசாலை மாணவர்கள் தேசிய கீதம் பாடினர். பிரதம அதிதி உட்பட பிரமுகர்களினால் சமாதான புறாக்கள் இதன்போது பறக்கவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம். அஸ்ஸம், முன்னாள் அதிபர்களாக எம்.இஸட்,எம். நயீம், மஸாயா நிஸாம், பன்நூல் ஆசிரியர் ஹாபிஸ் இஸதீன், பழைய மாணவர் சங்க செயலாளரும் தர்கா நகர் ஆஸ்பத்திரி வைத்தியருமான டாக்டர் இர்ஸான் ஹரீஸ் உற்பட பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

(பேருவளை பீ.எம். முக்தார்)

## 13 இற்கு

(முன்பக்கத் தொடர்ச்சி...)

**இதனால்,அவர் இக்கட்சி சார்பாக ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுவது கூட சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. பொருளாதார நெருக்கடியால், தென்னிலங்கையில் வீழ நேரிட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு,13 ஐ,அமுல்படுத்தும் ரணிலின் செயற்பாடுகளும் சரிவையே ஏற்படுத்துமென, இக்கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் கருதுகின்றனர்.**

**ஐக்கிய தேசிய கட்சியை அடியோடு நிராகரித்த தென்னிலங்கை,ரணில் ஜனாதிபதியாகத் தெரிவானதில் திருப்தியுடன் இல்லை.இதனால்,இவரை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்த பொதுஜன பெரமுனவுக்குப் பாடம் கற்பிக்கும் மனநிலையில்தான், தென்னிலங்கையின் கள நிலைகள் இருந்தன.இருந்தாலும்,படு வீழ்ச்சியிலிருந்த நாட்டைப் பொறுப்பேற்க வந்த ரணிலின் தைரியம் சிலரைச் சிந்திக்கவே செய்திருந்தது.ஆனால்,திடீரென இவர் இந்த "அந்தர் பெல்டியை" அடித்திருப்பதால், தென்னிங்கையின் அடித்தளமே ஆடிப்போயுள்ளது.**

**உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தும் பரபப்புக்களை,வேறு திசைக்குத் திருப்பும் ராஜதந்திரங்க ளா இவை. பாராளுமன்றத்தில் எந்தப்பலமும் இல்லாத இந்த ஜனாதிபதிக்கு அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தும் தைரியத்தை வழங்கியது யார்?வெளிநாடுகளின் நண்பனாக இருக்கும் ரணில்,நாட்டின் ஒருமைப்பாடு, ஆள்புல எல்லை மற்றும் ஐக்கிய இறைமையில் வேறுபாடுகளுக்கு வித்திடும் செயற்பாடுகளைச் செய்யக் கூடாதென தென்னிலங்கையின் கடும்போக்குகள் கண்டித்துள்ளன.**

## அடிமை

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இயல்பு வாழ்க்கை வீழ்ந்துள்ளதாகவும்,இந்நாட்டின் 220 இலட்சம் மக்கள் இனி எந்த ஆட்சியாளருக்கும்,தலைவருக்கும், அரசியல்வாதிகளுக்கும் அடிமைகள் அல்ல எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ராஜபக்சவின் அடிமைத்தனத்தை இன்னமும் உறுதிப்படுத்தும் மொட்டு யானை அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கான முதல் நடவடிக்கை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற்றதன் பின்னர் ஆரம்பிக்கப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பாணந்துறையில் நேற்று (4) இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

உலகில் எந்த நாடும் பொருளாதாரத்தை சுருக்கி பிரச்சினைகளைத் தீர்த்ததாக இல்லை எனவும்,தற்போதைய அரசாங்கம் பொருளாதாரத்தை சுருக்கி நாட்டு மக்களை அழிக்க முயல்வதாகவும்,தேவையை குறைப்பதன் மூலம் நாட்டின் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்று நினைக்கிறார்கள் என்றாலும்,அது தவறு எனவும்,இந்த பொருளாதார மற்றும் சமூக வீழ்ச்சியிலிருந்து மீள்வதற்கு பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதே ஒரே தீர்வு எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

2019 இல் ஒரு தவறு செய்யப்பட்டதாகவும், 2023 இல் மக்கள் மற்றொருவருக்குப் பின்னால் ஓடுவதாகவும்,இந்நாட்களில் பொய் சொல்லி தம்பட்டம் அடிக்கும் புரட்சியாளர்களுக்கு சர்வதேச ஆதரவு கிடைக்காது எனவும்,எமது நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமானால் அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் வர்த்தகம் செய்யும் திறன் வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

வடகொரியா,கியூபா போன்ற சோசலிச நாடுகள் எமது நாட்டை கட்டியெழுப்ப உதவாது என்பதால் இதுபோன்ற சோசலிவாதிகளின் பின்னால் செல்ல வேண்டாம் எனவும்,இவ்வாறான சோசலிசவாதிகளின் பின்னால் செல்வதால் நாட்டை தற்போதைய நிலையில் இருந்து மேலும் வீழ்ச்சியடையச் செய்யும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## அரசியலமைப்பு

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 25ஆம் திகதி முதல் முறையாக கூடிய அரசியலமைப்பு பேரவை, ஜனவரி 30ஆம் திகதி மீண்டும் கூடியது.

ஆணைக்குழுக்களுக்கு புதிய உறுப்பினர்களை நியமிக்கும் முறை குறித்து ஆலோசிக்கப்பட்டதுடன், அதற்கான விண்ணப்பங்களை கோரவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி பெப்ரவரி 1 முதல் 15ஆம் திகதி வரை ஆணைக்குழுக்குளுக்கான உறுப்பினர்கள் விண்ணப்பங்களை அனுப்ப அவகாசம் உள்ளது.

ஏற்கனவே வெற்றிடமாக உள்ள பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கான புதிய நியமனங்கள் தொடர்பில் நாளை கூடவுள்ள அரசியலமைப்பு பேரவையில் அவதானம் செலுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## பர்வீஸ்

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நீண்ட காலமாக உடல்நலக்குறைவால் அவதிப்பட்டு வந்த பாகிஸ்தான் முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரப் இன்று காலமானார். அவருக்கு வயது 79. துபாயில் உள்ள அமெரிக்க மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி இன்று காலமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் 1999ஆம் ஆண்டு ராணுவப் புரட்சி மூலம் நவாஷ் ஷெரிப் ஆட்சியைக் கலைத்து ஆட்சியைக் கைப்பற்றியவர் முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷரப். 2008ஆம் ஆண்டு பிரதமர் பதவியில் இருந்து விலகினார். அதன்பிறகு பாகிஸ்தானில் இருந்து வெளியேறி துபாயில் வசித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**வாசகர்களே!**

**இப்பத்திரிகை குறித்தான உங்களது நேர்த்தியான கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றது. உங்களது கருத்துக்கள் மற்றும் செய்திகளை கீழுள்ள மின்னஞ்சல் முகவரியூடாக அனுப்பி வைக்கவும்.**

editor@newsplus.lk

## சந்திம

(முன்பக்கத் தொடர்ச்சி...)

காலி ஹினிதும பகுதியில் நடைபெற்ற பேரணியிலேயே அவர் இவ்வாறு கலந்துகொண்டுள்ளார்.

இந்த நாட்டில் பட்டினியை ஒழிக்கும் செயற்பாட்டிற்கு சஜித் பிரேமதாச உழைக்க அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும், அவருடன் தனது உயிருள்ள வரை இணைந்து செயற்படவுள்ளதாகவும் வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு மகிந்த ராஜபக்ச காரணம் அல்ல, அதனால் அவர் அதற்கு பொறுப்புக்கூறத் தேவையில்லை என நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## முதலாம்தர

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பூரணப்படுத்தப்படும். அரசாங்கப் பாடசாலைகள் மார்ச் 28ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது தேசிய கல்வி நிறுவனத்துடன் இணைந்து இந்த பயிற்சித் திட்டத்தை அமுல் நடத்தவுள்ளது.

ஆசிரியர்கள் ஆங்கிலத்தில் பேசுவதை ஊக்குவிப்பதற்காகவே இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

மாணவர்கள் ஆங்கிலத்தை கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்ற கல்வி அமைச்சின் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முன்னோடியாகவே இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

## ஒன்பதன்று

(முன்பக்கத் தொடர்ச்சி...)

எடுக்கவுள்ளார். எட்டாம் திகதி பாராளுமன்ற கூட்டத்தொடர் திறந்து வைக்கும் நிகழ்வு இடம் பெறுவதனால் அதனை அடுத்த தினம் பாராளுமன்றம் கூடும் போதே சத்தியப் பிரமாணம் எடுக்கவுள்ளார்.

## பாராளுமன்ற

(முன்பக்கத் தொடர்ச்சி...)

விக்கிரமசிங்க இதனை ஆரம்பித்து உரையாற்றவுள்ளார்.

கூட்டத்தொடரின் ஜனாதிபதி ஆட்சி முறையைப் பகிஸ்கரிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்திருப்பதாக சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

## உள்ளூராட்சி

(முன்பக்கத் தொடர்ச்சி...)

திகதி கூடும் பொழுது அரசாங்க பாராளுமன்றக் குழுவின் கூட்டம் 08ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அங்கே இது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படும் என மொட்டுக் கட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தேர்தலுக்குத் தேவையான பணத்தை வழங்காத நிலையில் தேர்தலை நடாத்துவதில் தேர்தல் ஆணைக்குழு பெரும் சிக்கலை எதிர்நோக்கி இருக்கின்றது.

கடந்த வார அமைச்சரவையில் எடுத்த தீர்மானத்தின்படி அத்தியாவசிய செலவுகள் தொடர்பாக நிதியமைச்சு விடுத்துள்ள சுற்று நிருபம் காரணமாக சந்தேகம் எழுந்துள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பெசில் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, சாகல காரியவசம் உட்பட கட்சி முக்கியஸ்தர்கள் அண்மையில் கூடி பிரதமரிடம் தேர்தலை நடாத்துவது பற்றி வலியுத்தி இருக்கிறார்கள்.

அவசரமாக ஒரு தெளிவான முடிவைப் பெற்றுத் தருமாறு கேட்டு இருக்கிறார்கள்.

எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவுள்ள அரசாங்கப் பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் இது தொடர்பாக உறுதியான முடிவு ஒன்று தெரிவிக்க ப்படும் அங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது

தேர்தலை நடாத்துவது தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்க உரிமை தேர்தல் ஆணைக் குழுவுக்கும் நீதிமன்றத்திற்கு மே இருக்கின்றது.

கட்சியின் சில அமைப்பாளர்கள் சிறிது காலத்துக்கு தேர்தலை ஒத்திப்போடுமாறும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.

இது இவ்வாறு இருக்க மொட்டுக் கட்சியினர் தேர்தல் தொடர்பாக பிரசாரங்களை அடுத்த வாரம் ஆரம்பிப்பது குறித்து ஆராய்ந்து வருகிறார்கள்.

பிரசார நடவடிக்கைகள் முதலில் கம்பஹா மாவட்டத்திலும் பின்பு குருணாகல் மாவட்டத்திலும் ஆரம்பித்து நாடளாவிய ரீதியில் விஸ்தரிக்கப்படும்.

## உயர்ந்தது

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அறிவித்துள்ளது.

அதற்கமைய, 12.5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 334 ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளதோடு, புதிய விலையாக 4,743 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

மேலும், 5 கிலோ நிறையுடைய சமையல் எரிவாயு விலை 134 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு புதிய விலையாக 1,904 ரூபாவுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

மேலும், 2.3 கிலோ நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 61 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளதோடு, புதிய விலையாக 822 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளதாக லிட்ரோ நிறுவன தலைவர் தெரிவித்துள்ளார்.

# கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம் பெற்ற 75வது சுதந்திர தின நிகழ்வு










**13...**
(முன்பக்கத் தொடர்ச்சி...)

நசீர் அஹமட்,

தமிழ் சமூகம் தமது அரசியல் அதிகாரங்களைப் பெற்றக் கொள்வதற்காக சர்வதேசத்தின் ஊடாக அரசிற்குக் அழுத்தம் பிரயோகிக்கின்றார்களோ அத்துடன் 13ஐ அமுல்படுத்துவதற்கும் சர்வதேசத்தின் அழுத்தத்தினை நாடுகின்றபோது நாம் வெறுமனே கைகட்டிக் கொண்டு வேடிக்கை பார்க்கும் சமூகமாக ஒருபோதும் இருக்கக் கூடாது.

நமக்குரிய சகல உரிமைகளையும் நாம் பெற்றதன் பின்புதான் தமிழ் சமூகத்துடன் இணைந்து போகக் கூடிய் முறையில் நாம் பயணித்தல் வேண்டும். இந்த விடயத்தில் நாம் ஒருபோதும் மீண்டும் பிழைவிட்டுவிடக் கூடாது. இந்த விடயத்தில் அமைச்சரவையில் நானும் வெளிநாட்டு அமைச்சரும் சமூகம் சாாந்தவிடயங்களில் எங்களால் முடியுமான அளவு காய்நகர்தலை நகர்த்தி வருகின்றோம்.

இன்றைய பொருளாதார நிலையில் எந்தவொரு தலைவரும் இந்த நாட்டினை கைஏற்காத நிலையில் தன்னால் முடியும் என ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க இந்த நாட்டின் பொருளாதாரத்தினை கட்டிஎழுப்புவதற்காக அவர் கை ஏற்று உள்ளார். அதற்காக முஸ்லிம் சமூகமும் அவருடன் இணைந்து கைகொடுத்தல் வேண்டும்.

இந்த நாடடின் 75வது சுதந்திரத்திற்கு முன்பு முஸ்லிம்கள் எவ்வாறு. இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கும் அபிவிருத்திகளுக்கும் கைகொடுத்தார்களோ அதே போன்றுதான் இந்தத் தர்ணத்திலும் நாம் கைகொடுத்தல் வேண்டும்.

1000 வருடங்களுக்கு முன்பிருந்தே முஸ்லிம்கள் ஒருபோதும் இந்த நாட்டினை காட்டிக்கொடுக்க வில்லை எமது முதாதையர்கள் இணைந்து தோளோடு தோல்கொடுத்துள்ள வரலாற்றுச் சம்பவங்கள் இருந்து வருகின்றது.

2019ல் முன்னைய அரசில் எமக்கு நடைபெற்ற கருப்புப் புள்ளிகளை நாம் சிறுகச் சிறுக அகற்றி வருகின்றோம். சில சர்ந்தர்பபத்தில் எமது பள்ளிவாசல்களுக்குள் நாயைக் கொண்டு சென்ற சர்ந்தர்ப்பங்களும் உண்டு.

நானும் வெளிநாட்டு அமைச்சர் அலிசப்ரியும் இணைந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்று எமது நாட்டில் அரபியர்கள் மூலதனமிடுவதற்கும் பொருளாதாரத்திற்கு கட்டியெழுப்புவதற்கும் மத்திய கிழக்கு நாடுகள இலங்கையின் இராஜதந்திர உறவுகளை மீள கட்டியெப்பி வருகின்றோம். இதே போன்று தான் 1970களில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையார் காலத்தில எமது நாடு பொருளாதாரத்தில் வீழ்ந்தபோது அப்போது இருந்த முஸ்லிம் தலைவர்கள் மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் முஸ்லிம் நாடுகளுக்குச் சென்று உறவுகளை பலப்படுத்தி பொருளாதாரத்தினைக் மீள கட்டியெழுப்புவதற்காக பாடுபட்ட வராலாறுகளையும் நாம் மறக்க முடியாது. அபகரிக்க்பபட்டன. இன்றும் அந்த அவல நிலையில் இருந்து அகலவில்லை. இன்றும் வடக்கு வாழ் முஸ்லீம்களுக்கு எவ்வித தீர்வுகளும் எமது காணி நிலங்கள், சொத்துக்கள் நிவாரணம்

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

75வது சுதந்திர தினத்தின் இஸ்லாமிய சமய நிகழ்வு கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நேற்று இடம் பெற்றது.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 75வது சுதந்திர தினத்தை முன்னிட்டு இஸ்லாமிய சமய நிகழ்வை இன்று காலை கொழும்பு பெரிய பள்ளிவாசலில் புத்தசாசன மத மற்றும் கலாசார விவகார அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல் திணைக்களம் ஏற்பாடுகளை செய்திருந்தது.

திணைக்களத்தின் பணிப்பாளர் இஸட்.ஏ.எம்.பைஸல் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் அலி ஸப்ரி பிரதம அதிதியாக கலந்து கொண்டு தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். அத்துடன் சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிருவாகிகள் உலமாக்கள் முக்கிய பிரமுகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தனர்.









அகில இந்திய யூனியன் ஒப் முஸ்லிம் லீக்கின் பவள விழாவை முன்னிட்டு மாதர் அணி சார்பில் அதன் தலைவி பாத்திமா முஸப்பரின் ஏற்பாட்டில் ஒரு லட்சம் ரூபாய் பணம் அகில இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் தலைவர் பேராசிரியர் காதர் முகைதீனிடம் கையளித்த போது எடுக்கப்பட்ட படம்.

(திருச்சி சாஹுல் ஹமீத்)



பிரதி மாவட்ட சாரண ஆணையாளராக அக்கரைப்பற்று எம்.ஐ. உதுமாலெப்பை நியமிக்கப்பட்டுள்ளார். பிரதம சாரணர் ஆணையாளர் ஜனப்பிரித் பெர்னான்டோ நியமனக் கடிதத்தைக் கையளிப்பதனைப் படத்தில் காணலாம். இவர் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப மூன்னணிகளின் சம்மேளனத்தின் தேசிய தலைவராவார். பிரதி ஆணையாளர் எம். எப் முபீதும் படத்தில் காணப்படுகிறார்.

**முஸ்லிம்...**
(முன்பக்கத் தொடர்ச்சி...)

20 ஆம் திகதி திங்கட் கிழமை ஆரம்பமாகும்.

மூன்றாம் தவணையின் மூன்றாம் கட்டம் எதிர்வரும் மார்ச் 21 வரை நீடிக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.




# அரங்கம்

# தேர்தல் நடைபெறுமா? இல்லையா?

**தேர்தல் நடைபெறுமா? இல்லையா?**

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் 10 கோடி ரூபா செலவில் நடைபெறவிருக்கின்ற உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படுமா இல்லையா என்ற வாதப்பிரதிவாதங்களுக்கு மத்தியில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. பொதுவாக ஆளும் கட்சித் தரப்பில் எவ்வித தேர்தல் பிரசார நடவடிக்கைகளும் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. எதிர்வரும் 10 ஆம் திகதி இது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்கின் தீர்ப்பிலே தேர்தல் நடைபெறுமா இல்லையா என்பது தங்கியிருக்கின்றது. குறிப்பாக தேர்தலை நடத்துவதற்கு பணத்தை வழங்க முடியாது என்று திறைசேரி தெரிவிக்கின்ற நிலையிலே, உயர்நீதிமன்றம் எவ்வாறு இதனை நோக்கப்போவது என்பது இங்கிருக்கின்ற முக்கியமான பிரச்சினையாக உள்ளது.

கூடாது என்றும் அதேபோல் தேர்தலை நடத்த வேண்டுமென்றும் இருதரப்பிலும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

தேர்தலை நடத்துவதை விட நடத்தாமல் இருப்பது சம்பந்தமாகவே அநேகமாக அந் நடவடிக்கைகள் கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ளன.

இதுவரை ஐக்கிய மக்கள் சக்தியும், ஜேவிபி கூட்டணியுமே பிரசாரங்களை மிக வேகமாக முன்னெடுத்து வருகின்றனர். அரச தரப்பிலே எந்தவொரு பிரசார நடவடிக்கையும் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

நிதகஸ் ஜனதா, சங்விதானய என்ற கூட்டு அணியில் அங்கம் வகிக்கின்றது. இந்த கூட்டணியின் கூட்டமொன்று சில தினங்களுக்கு முன் எதிர்க்கட்சி தலைமையகத்தில் கடந்த திங்களன்று நடைபெற்றது.

**சபாநாயகர் கருவுக்கு ஸ்ரீலங்கா அபிமான விருது**

சபாநாயகர் கருஜயசூரியவுக்கு இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு உயர் விருதொன்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் வழங்கப்பட்டது. சுதந்திர தினத்துக்கு முன்னன்று பிரம்மாண்டமான நிகழ்வில் இந்த கௌரவ விருது வழங்கப்பட்டது. இலங்கையில் இதுவரையில் சேவைகளுக்காக வழங்கப்படும் உயர் விருது இதுவாகும்.

இந்த விருது இலங்கையிலே ஐந்து பேருக்கு மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது. நாட்டுக்காக பெரும் பணி செய்தவர்களுக்கே இந்த அரச விருது வழங்கப்படுகின்றது.

அரசியல்வாதிகளுக்கு மட்டுமே இந்த விருது வழங்கப்பட்டிருக்கின்றது. ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச, டீ.பி. விஜயதுங்க ஆகியோருக்கும் முன்னாள் வெளிவிகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கும் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. ஏனையவர்களில் ஆதர் சீ கிளாக் , சீ.ஜே.வீரமந்திரி, ஏ.டி. ஆரியரத்ன, ஏ.டபிள்யூ. அமரதேவ ஆகியோருக்கும் இந்த விருதுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் முக்கியமான பங்குவகித்தவர் கருஜயசூரிய, அவர் சபாநாயகராக, அமைச்சராக பணியாற்றியவர்.

அவருக்கு ஸ்ரீலங்கா அபிமான என்ற இந்த விருதினை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுதந்திர தினத்தையொட்டி வழங்கி வைத்தார்.

**ஜனாதிபதி தேர்தலில் மைத்திரி**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன மீண்டும் அரசியல் களத்தில் பேசப்படும் ஒரு சரிதையாக மாறியுள்ளார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான தீர்ப்பு மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக வந்ததையடுத்து அவர் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்துள்ளார்.

தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்காக அவர் கத்தோலிக்க சமூகத்திடம் மன்னிப்பு கோரியிறுந்தார். இந்த மன்னிப்பை கத்தோலிக்க ஆயர்கள் சபை ஏற்றுக்கொள்ளாத நிலையில் இப்போது அது வாதப்பிரதிவாதமாக மாறியுள்ளது. 2024 ஆம் ஆண்டு நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார்.

இதன்படி இப்போது ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச அதேபோன்று ஜேவிபியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க ஆகியோர் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

கருத்து முரண்பாடுகள் மும்முரம் இடம்பெற்றுள்ள நிலையில், 2024 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கின்ற தேர்தலில் மைத்திபால சிறிசேன போட்டியிடுவதாக அறிவித்திருப்பது கட்சிக்குள்ளும், அரசியல் அரங்கிலும் ஏன் இந்த சந்தர்ப்பத்தில் இந்த அறிவிப்பை செய்தார் என்று பெரும் கேள்விகளை எழுப்பியிருக்கின்றன.

...........

அமைச்சரவை கூட்டம் ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடைபெற்ற போது ஜனாதிபதி முக்கியமாக நாட்டில் இருக்கின்ற நிதிநிலைமைகள் பற்றி விளக்கினார்.

அரச நிதி செலவுகளை கட்டுப்படுத்துவது சம்பந்தமாக ஜனாதிபதி பிரேரணைகளை அமைச்சரவைக்கு முன்வைத்தார். நாட்டின் செலவைக் கட்டுப்படுத்தும் பிரேரணையொன்று இன்று முன்வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அரச நிறுவனங்கள் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அமைச்சர் பந்துல குணவர்தன கருத்துத் தெரிவித்தார்.

”சேர் இது ஒரு கஷ்டமான விடயம். நிறுவனங்கள் கடனடிப்படையிலே செலவுகளை செய்கின்றன என்று தெரிவித்தார்.

ஆம் , இது கஷ்டம்தான் எனினும், எங்களிடம் பணமில்லை. இந்த மாதத்தில் வருமானத்தை விட இரண்டு மடங்கு செலவு அதிகரித்திருக்கின்றது என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

மற்றொரு முக்கிய அறிவிப்பையும் செய்தார். நாட்டில் நிதிநிலைமை மோசமாக இருக்கின்றது. மக்களுக்கு கஷ்டமெனத் தெரியும். ஆனால், மூன்றாம் பருவத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பொன்றை வழங்கக்கூடியதாக இருக்கும் என்று தெரிவித்தார்.

**ஐ.ம.ச.தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பெருந்திரளான மக்கள்**

ஐக்கிய மக்கள் சக்தியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் குருநாகலில் நடைபெற்றது. அசோக அபேசிங்க உட்பட குருநாகல் மாவட்ட எம்.பி.க்கள் ஏற்பாடு செய்த இந்த கூட்டத்துக்கு பிரமாண்டமான மக்கள் வருகை தந்திருந்தனர். சஜித் பிரேமதாச இங்கு முக்கிய உரையாற்றினார். பெரும் சந்தோசத்தை அளிப்பதாக இந்த கூட்டம் அமைந்திருந்தது.

மறுதினம் குருநாகல் மேயர் தெரிவும் இடம்பெற்றது. ஜொன்சன் பெர்ணான்டோவின் கட்டுப்பாட்டில் இதுவரை இருந்த குருநாகல் மாநகர சபையின் மாநகர முதல்வர் பதவி நீக்கப்பட்டதையடுத்து இத் தேர்தல் நடைபெற்றது. இத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு அமோக வெற்றி கிடைத்தது. இதுவும் ஐக்கிய மக்கள் சக்தியினருக்கு தேர்தல் தொடர்பாக ஒருபெரும் ஊக்கத்தை அளிப்பதாக அமைந்துள்ளது.

**கிழக்கில் ஜே.வி.பி.க்கு பலத்த வரவேற்பு**

கிழக்கு மாகாணத்திலுள்ள சகல தமிழ், முஸ்லிம் பிரதேசங்களிலும் கூட்டங்களை நடத்தினார். அக்கரைப்பற்று உட்பட பல இடங்களில் நடைபெற்ற கூட்டங்களில் பெரும்திரளான முஸ்லிம்கள், தமிழர்கள் பிரசன்னமாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் காங்கிரஸின் கோட்டையாக இருக்கும் பல இடங்களில் ஜாதிக ஜன பலவேகயவின் தலைவராக இருக்கும் அனுர குமார திசாநாயக்க உரையாற்றினார். கிழக்கு மாகாண முஸ்லிம்கள் அனுர குமார திசாநாயக்கவுக்கும் பலத்த வரவேற்பை அளித்திருந்தது இக் கூட்டங்களில் காணக்கூடியதாக உள்ளது.

இறக்காமம், நிந்தவூர் உள்ளூராட்சி மன்றங்களில் ஜேவிபி சார்பில் பலமான அமைச்சர்கள் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். வழமைக்கு மாறாக இம்முறை ஜேவிபி சார்பில் முஸ்லிம்களும் குறிப்பாக முஸ்லிம் பெண்களும் போட்டியிடுவது காணக்கூடியதாக இருக்கின்றது. பலரும் இதை ஒரு புதிய மாற்றமாக நோக்குகின்றனர்.

**ஆணைக்குழுவில் இருந்து அதன் உறுப்பினரான சார்ல்ஸ் விலகினாரா?**

ஆணைக்குழுவுக்கு கடந்த இரு வாரங்களாக பெரும் அச்சுறுத்தல்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது. அடிக்கடி போலிச்செய்திகள் வெளிவந்து அவர்களுடைய செயற்பாடு பற்றி கேள்வி எழுப்பப்பட்டது. ஒரு கட்டத்தில் ஆணைக்குழுவின் தலைவர் இராஜினாமா செய்திருக்கிறார் என செய்தி வெளிவந்தது. மற்ற கட்டத்தில் உறுப்பினர்களுக்கு சார்ல்ஸ் விலகியதாக செய்தி வெளிவந்தது.

இவ்வாறான செய்திகள் குறித்து தெளிவான விளக்கம் ஒன்றைப் பெற முடியாத நிலையில், திருமதி சார்ல்ஸ் விலகியதாக ஜனாதிபதிக்கு வந்த கடிதம் தொடர்பாக பல விதமான கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

எனினும், திருமதி சார்ல்ஸ் தேர்தல் ஆணைக்குழுவின் அறிக்கைகளுக்கு கையொப்பமிட்டு அனுப்பியுள்ளார். பல அறிக்கைகளில் அவர் கையொப்பமிட்டிருக்கிறார். இந்த நிலையில் சார்ல்ஸ் விலகினாரா? இல்லையா? என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.

ஜனாதிபதியிடம் அமைச்சரவைக் கூட்டத்தில் இது பற்றிக் கேட்ட போது ”அவர் இராஜினாமா கடிதம் அனுப்பியிருந்தார். நான் அதை இன்னும் ஏற்றுக்கொள்வதா? இல்லையா என்ற முடிவொன்று எடுக்கவில்லையென அவர் தெரிவித்தார்.

இராஜினாமா கடிதத்தை குறைந்த பட்சம் ஆணைக்குழுவிற்காவது சமர்ப்பித்திருக்கவில்லை.

........மூலமாவது தான் விலகியதாக ஆணைக்குழுவுக்கு அறிவித்திருக்கவில்லை.

சார்ல்ஸ் இல்லாவிடினும் ஆணைக்குழுவுக்கு செயற்பட முடியுமென்ற நிலையில், சார்ல்ஸ் இல்லாமலே ஆணைக்குழு அதன் பணிகளை முன்னெடுத்தது. சார்ல்ஸ் பதவி விலகுவதாக அறிவிக்கப்பட்டதை ஒரு துட்டுக்கும் மதிக்காமல் ஆணைக்குழு அதன் செயற்பாடுகளை முன்னெடுத்தது குறிப்பிடத்தக்கது.

அங்கத்தவர்களுக்கு எதிராக மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. இந்த அச்சுறுத்தலையடுத்து அவர்களுக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியிலும் ஆணைக்குழுவின் கூட்டத்துக்கு அங்கத்தவர்கள் வருகை தந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

துபாய் நாட்டில் இருக்கின்ற இலக்கமொன்றிலிருந்தே இந்த அச்சுறுத்தல் வந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிகால் தல்துவ தெரிவித்திருந்தார். இது வட்ஸ்அப் மூலமாகவே இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

தேர்தல் ஆணைக்குழு அங்கத்தவர் எம்.எம் மொஹமத்திடம் கேட்ட போது, தனக்கு நேரடியாக தொலைபேசியிலும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. தான் அதற்கு ஏதும் பதிலளிக்கவில்லை. அவர்கள் சொன்னதை கேட்டுக்கொண்டு தான் இருந்தேன் என்றும் தெரிவித்தார்.

தொடர்ந்து பலமுறை தனது இலக்கத்துக்கு அச்சுறுத்தல் வந்ததாகவும் அவர் தெரிவித்திருந்தார். தேர்தல் காலத்தில் இரு அங்கத்தவர்களுடைய வீட்டுக்குப் பலவந்தமாகப் புகுந்து புகைப்படங்கள் எடுத்த சம்பவங்கள் பற்றியும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஆணைக்குழு நடாத்திய செய்தியாளர் மாநாட்டில் ஆணைக்குழுவின் தலைவர் புன்சி ஹேவா தனது அங்கத்தவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது குறித்து தெரிவித்திருந்தார்.

ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டிருக்கும் போது அதனை சீர்குலைப்பதற்காக செயற்பட்ட சார்ல்ஸ்க்கு எதிராக வழக்குகள் தொடர்வது குறித்தும் சட்டத்தரணிகள் ஆராய்ந்து வருவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

தகவல் பணிப்பாளர் நாயகம் விடுத்த அறிக்கையொன்றும் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

திமுத் கருணாரட்ன விடுத்த அறிக்கையில், தேர்தலுக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவில்லையென்று தெரிவித்திருந்தார். யாருடைய ஆலோசனையில் இவ்வாறனதொரு அறிக்கை விடப்பட்டது என்பது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. இது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் பதில் அறிக்கையொன்றையும் விடுத்திருந்தார். பணிப்பாளர் நாயகத்துக்கு இது கடமையான பணியல்ல என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். அறியாமை குறித்து அவர் கவலை தெரிவித்திருந்தார்.

---

NEWS PLUS
WWW.NEWSPLUS.LK
2023 FEBRUARY 06 - MONDAY

Email: editor@newsplus.lk
FB: newsplustamil

# சவூதி இலங்கை உறவில் புதிய அத்தியாயம் ஆரம்பம்

நீண்ட காலமாக இலங்கைக்கும் சவுதி அரேபியாவுக்கும் இடையே இருந்து வந்த உறவில் புதிய அத்தியாயம் ஒன்று இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் சவூதி – இலங்கை உறவிலிருந்து வந்த பின்னடைவு நீங்கும் அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளன.

கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சி காலத்தில் சவூதி அரேபியா உட்பட முஸ்லிம் நாடுகள் தொடர்பாக கடைபிடித்து வந்த கொள்கை காரணமாக முஸ்லிம் நாடுகள் இலங்கை தொடர்பாக மென்மைப் போக்கினையே கடைபிடித்து வந்தன.

முஸ்லிம்களுக்கு எதிராகவும் இஸ்லாத்துக்கு எதிராகவும் ஆட்சியுடன் சம்பந்தப்பட்ட சில அமைச்சர்கள் மற்றும் ஆதரவு அணியினர் நடாத்திய வெறுப்புப் பிரசாரங்கள் முஸ்லிம் நாடுகளுக்கு இடையான உறவில் விரிசலை ஏற்படுத்தியது.

அமைச்சர் அலிசப்ரி அண்மையில் சவூதி அரேபியாவுக்கு மேற்கொண்ட விஜயத்தை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் மாற்றம் ஏற்படத் தொடங்கியுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் மட்டுமின்றி, கடந்த ஆறு மாத காலத்தில் நான்கு அமைச்சர்கள் இலங்கையிலிருந்து சவூதி அரேபியா சென்று சவூதி – இலங்கை உறவை மேம்படுத்துவது உதவிகளைப் பெறுவது சம்பந்தமாக பேச்சு வார்த்தை நடாத்தியுள்ளனர்.

வளர்முக நாடுகளில் ஒன்றான சவூதி அரேபியா, இலங்கையில் முதலீடுகளைக் கூடுதலாக மேற்கொள்வதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, தனது சவூதி விஜயத்தின் போது சவூதி அரேபிய வெளிவிவகார அமைச்சர் இளவரசர் பைசால் பின்த் பர்ஹான் இஸ்லாமிய அபிவிருத்தி வங்கி மற்றும் இஸ்லாமிய நாடுகளின் அமைப்பின் பிரதிநிதிகள் உட்பட உயர் அதிகாரிகளைச் சந்தித்து இலங்கையுடனான உறவைப் புதுப்பிப்பதற்கான பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்துள்ளார்.

இலங்கை வரலாற்றில் நாடு ஒருபோதும் எதிர் நோக்காத பொருளாதார மற்றும் நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள நிலையில், சவுதி அரேபியா போன்ற பெட்ரோலிய வளமுள்ள முன்னணி அபிவிருத்தி நாட்டின் உதவி கிடைப்பது பெரும் வரப்பிரசாதமாக அமையும்.

இலங்கையில் உள்ள சவூதி அரேபியா தூதுவர் காலித் ஹமூத் அல் கத்னி இலங்கைக்கும் சவுதி அரேபியாவுக்கும் இடையிலான உறவைப் மேம்படுத்துவதற்கு விசேட அக்கறை காட்டி வருவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

உருவாகி உள்ள நல்ல சூழ்நிலையை இலங்கை பயன்படுத்த வேண்டும். சவூதி நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு கைவிடப்பட்டுள்ள நுரைச்சோலை வீடமைப்புத் திட்டம் போன்ற

உறவைப் பாதித்துள்ள விடயங்கள் குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்துவதன் மூலம் மலரும் உறவை மேம்படுத்த முடியுமாக இருக்கும்.



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

# மனநலமும் ஆலோசனையும்

# வீடு மெழுகுதல்

ஒரு காலத்தில் பெண்கள் வீட்டினை சாணம் இட்டு அல்லது சிவப்பு சேறுவிட்டு மெழுகுவார்கள்.

இது வீட்டை சுத்தம் செய்யும் பாரம்பரிய முறையாக இருந்து வந்ததுடன் ஒரு சிறந்த உடற்பயிற்சியாகவும் இதை எமது பெண்கள் செய்து வந்தனர். குறிப்பாக எமது தமிழ் உறவுகள் மாட்டு சாணத்தை பயன்படுத்தி வீடு மெழுகுவார்கள். மண்ணையும் உபயோகிப்பார்கள். முஸ்லிம் உறவுகள் பெரும்பாலும் மண்ணை பயன்படுத்தியே வீடு மெழுகுவார்கள்.

வயிற்றினை அழுத்தி மண்டியிட்டு மண்ணில் மெழுகும் போது நரம்புகளும், இடுப்பு எலும்புகளும் வலுப்படுவதுடன் உடலுக்கு ஊக்கமும் உற்சாகமும் கிடைக்கும் என்று அவர்கள் நம்பினார்கள்.

வீட்டு வளவில் அல்லது வாழும் சூழலில் இருந்து நல்ல செம்மண் எடுத்து அதில் தண்ணீர் சேர்த்து கஞ்சி போல பதமாக்கி அதை கைகளை விரித்து தரையில் பூசுவதே வீடு மெழுகுவதாகும். கிழமைக்கு ஒரு விடுத்தும் என்றோ அல்லது மாதத்துக்கு ஒரு தடவை என்றோ வீடு மெழுகுவார்கள். நல்ல நாட்கள், வைபவங்கள், நல்ல சமூக, கலாசார நிகழ்வுகளுக்கு தயாராகும் போது வீடுகளை மெழுகுவது வழக்கமான ஒரு விடயமாக இருந்தது. வீடு மெழுகுவது போலவே அடுப்பங்கரையையும் மெழுகி சுத்தமாகவும் பார்ப்பதற்கு அழகாகவும் வைப்பார்கள். கர்ப்பவதியாக இருந்த தாய்மார்கள் கூட வீடு மெழுகுவதில் ஆசையுடன் ஈடுபட்டார்கள் என்று எமது முதியவர்கள் சொல்லக் கேட்கிறோம்.

மண் தூய்மைப்படுத்தும் தன்மை கொண்டதாலும் ஒரு சிறந்த தொற்று நீக்கியாக இருப்பதாலும் வீட்டின் தரைகளை மண்ணால் சுத்தம் செய்வது பாரம்பரிய முறையாக இருந்து வருகிறது.

(தற்கால பிள்ளைகளின் சிந்தனையில் ஒரு வரலாற்று பதிவாக இந்த தகவலை செதுக்கி விடுகிறோம்)

# அட்டாளைச்சேனை பிரதேச சபைக்காக முதற் தடவையாக தேசிய மக்கள் சக்தி (JVP) போட்டி


(ஒலுவில் இஸட்.ஏ.றஹ்மான்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்பதற்கான அனுமதி அரசினால் வழங்கப்பட்டதனால் இலங்கையிலுள்ள அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழக்கள் அன்பன வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளன. இதே வேளை தேசிய மக்கள் சக்தி (JVP) நாட்டின் அனைத்து உள்ளூராட்சி சபைக்களிலும் போட்டியிடவுள்ளது.

அந்த வகையில் முதற் தடவையாக அட்டாளைச்சேனை பிரதேச சபைக்காக தேசிய மக்கள் சக்தி (JVP) போட்டியிட தீர்மானித்து அதற்கான வேட்பு மனுககளை தாக்கல் செய்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கான 11 வட்டாரங்களான அட்டாளைச்சேனை 06 வட்டாரங்கள்,பாலமுனை02 வட்டாரங்கள், ஒலுவில் 2 வட்டாரங்கள், திகவாபி 01 வட்டாரம் ஆகியவற்றில போட்டியிடவுள்ளது.

இலங்கை மக்கள் தற்போது அரசியல் மாற்றம் ஒன்றை எதிர்பார்த்துள்ளதால் தேசிய மக்கள் சக்தி (துஜீ) அனைத்து உள்ளூராட்சி சபைக்களிலும் பிரதி நிதித்துவத்தைப் பெறும் வாய்ப்புள்ளதாக அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

# அழகிய பெயர்கள் நூல் வெளியீடு




அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் உப தலைவர் அல் ஷேக் எச் ஒமர்தீன் எழுதிய அழகிய பெயர்கள் என்ற நூலின் வெளியீட்டு விழா எதிர் வரும் 12ம்திகதி மாலை 4 மணிக்கு தெஹிவளை ஜூம்ஆப் பள்ளி வாசலில் நடைபெறும்.ஜாமியா நளீமிய்யாவின் பணிப்பாளர் ஏ.சி ஆகார் முஹம்மத் நூலை அறிமுகஞ் செய்து வைப்பார்.அஷ் சேக் ஹஸன் பரீதும் உரையாற்றுவார்.

# அம்பாறை விஜயம் செய்த சுவிஸ் உயர்ஸ்தானியகர்





சுஸ்விட்சர்லாந்து நாட்டினுடைய உயர்தானிகர் Dr. Dominic Furgler கிழக்கு மாகாண விஜயத்தின் ஒரு தொடர்ச்சியாக அண்மையில் (26) அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்தார்.

இதன் போது அம்பாறை மாவட்டத்தின் முன்னணி அரச சார்பற்ற நிறுவனமான புயுகுளுமு நிறுவனத்தின் ”சமூக ஒருமைப்பாட்டிற்கான பிராந்திய மையம்” ற்கு விஜயம் செய்திருந்தார்.

இந் நிகழ்வானது GAFSO நிறுவனத்தின் திட்ட பணிப்பாளர் ஏ.ஜே. காமில் இம்டாட் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபை சிரேஷ்ட்ட உறுப்பினர்கள், மற்றும் சம்மாந்துறை பிரதேச சபையினுடைய முன்னாள் தவிசாளர், உறுப்பினர்கள் மற்றும் நாவீதன்வெளி பிரதேச சபையை பிரதிநிதித்துவப் படுத்தி அதனுடைய சிரோஷ்ட உறுப்பினர்கள், கல்விமான்கள் மற்றும் புயுகுளுமு நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஐ. யுடினரட துயடிடியச ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இதன்போது அம்பாறை மாவட்டத்தில் காணப்படுகின்ற அரசியல் நிர்வாக பிரச்சினைகள் சம்பந்தமாக உயர்ஸ்தானிகரோடு கலந்துரையாடப்பட்டது. இதன் போது பல்வேறு விடயங்கள் கலந்துரையாடலில் முன் வைக்கப்பட்டு கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

# போதையை ஒழிக்க கையெழுத்து வேட்டை



(எச்.எம்.எம்.பர்ஸான்)

மட்டக்களப்பு - கல்குடா தொகுதியில் அதிகரித்து வரும் போதைப்பொருள் விற்பனை மற்றும் பாவனைகளை தடுக்க பல்வேறு முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்தொடரில், போதைப்பொருள் விற்பனை மற்றும் பாவனைகளை சட்ட ரீதியாக தடுப்பதற்காக வேண்டி கல்குடா தொகுதியிலுள்ள பள்ளிவாசல்களில் கையெழுத்து சேகரிக்கும் திட்டம் வெள்ளிக்கிழமை (3) ஜூம்ஆப் தொழுகையின் போது மேற்கொள்ளப்பட்டது.

இதில், பெருமளவான பொதுமக்கள் எதிர்ப்புக்களை வெளியிட்டு கையொப்பங்களை இட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிவனடி பாத மலை பருவ காலம் ஆரம்பம்: யாத்திரிகர்கள் அதிகளவில் வருகை!





(செ தி.பெருமாள்)

விடுமுறை காரணமாக கடந்த 2 ம் 3 ம் 4ம் திகதி களில் சிவனடி பாத மலைக்கு தரிசனம் செய்ய 25 ஆயிரம் பக்தர்கள் வருகை தந்த நிலையில் உள்ளதாக நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாந்த வீரசேகர கூறினார்.

இவ்வாறு வருகை தந்த யாத்திரிகர்கள் புகையிரத வழியாகவும் அரச தனியார் பேருந்து வழியாகவும் சிரிய ரக வேன் கார் மற்றும் இருசக்கர வாகனம் முச்சக்கர வண்டிகள் மூலம் தொடர்ந்து வருகை தந்த நிலையில் உள்ளதாகவும்.நேற்று முதல் நல்லதண்ணி நகரில் உள்ள இரண்டு வாகன தயாரிப்பு இடங்கள் முற்றிலும் நிறம்பி விட்டதால் நல்லதண்ணி மரே மற்றும் நல்லதண்ணி மஸ்கெலியா பிரதான வீதியில் சுமார் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் வாகனங்கள் நிருத்தப் பட்டு உள்ளது என நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாந்த வீரசேகர கூறினார்.

தொடர்ந்து அவர் கூறுகையில் இன்றும் நாளையும் விடுமுறை காரணமாக அதிகளவில் யாத்திரிகர்கள் வரும் வாய்ப்பு உள்ளது அதனால் போக்குவரத்து பொலிசார் சேவையில் ஈடுபட்டுத்த பட்டுள்ளனர்.

சிவில் உடையில் அதிகளவில் பாதுகாப்பு யாத்திரிகர்களுக்கு வழங்க பட்டு வருகிறது என அவர் கூறினார்.



பத்தரமுல்லை ஜயவர்த்தனகம வீடமைப்புத் திட்டத்தில் வாழும் 50க்கும் மேற்பட்ட மலே மற்றும் முஸ்லிம் குடும்பங்கள் இணைந்து பெரும்பாண்மைச் சகோதரர்களும் இணைந்து ஜயவர்த்தண ஜூம்ஆப் பள்ளிவாசலிலும் அகதியா பாடசாலையும் இணைந்து 75வது தேசிய சுதந்திரத்தினை விமர்சையாக கொண்டாடினார்கள். அத்துடன் சகல சமூகங்களையும் சார்ந்த 100 மாணவர்களுக்கு பாடசாலைப் பயிற்சிப் கொப்பிகளையும் வழங்கி வைத்தனர் தலங்கம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் பேர்ட்டி வீரசிங்க மற்றும் பள்ளிவாசல் நிர்வாகத் தலைவர் எம். ஐ.மர்ஜான், இஸ்மாயில் மௌலானா ஆகியோர்களும் கலந்து தேசியக் கொடியை ஏற்றி வைத்தனர். அத்துடன் இப்பிரதேச மாணவர்கள் இளைஞர்கள் ஒழுக்கங்கள் பாடசாலை மாணவர்கள் எவ்வாறு பராமறிக்க வேண்டும், போதைப்பொருள், தவிர்த்தல் போன்ற தலைப்புக்களில் பொலிஸ் அதிகாரி உரையாற்றினார்.

(அஷ்ரப் ஏ சமத்)



சுஜப்,எம்,காசிம்

# முதலாளித்துவத்தை வீழ்த்துவதில் ஜே.வி.பி எதிர்கொள்ளும் வீழ்ச்சிகள்!

மக்கள் மத்தியில் நிலைத்து அநீதியை ஒழிக்க நினைக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் முயற்சிகள் இம்முறையாவது வெற்றியளிக்குமா?





ஜே.வி.பி யின் ஒவ்வொரு முயற்சிகளும் கடைசி நேரத்தில் கை கழுவப்படுவதால் வரும் சந்தேகமே இது. இதில் முதலாளித்துவ சக்திகள் இன்னும் முனைப்புடன்தான் உள்ளன. இக்கட்சியின் கடந்தகால செயற்பாடுகளை இன்றளவும் தேர்தல் களங்களில் காயப்படுத்தி, காட்சிப்படுத்துவதிலும் முதலாளித்துவம் சளைக்கவில்லை. மக்களுக்கான இக்கட்சியின் கடந்தகாலக் கிளர்ச்சிகள் இன்றளவும் ஜனநாயகப படுத்தப்படாமலிருப்பதும் இதனால்தான்.

இதைக் காட்சிப்படுத்தும் முதலாளித்துவம் களத்திலிருந்து வெற்றியுடனே திரும்புகிறது. அரசியல் நீரோட்டத்தில் இணைந்த காலந்தொட்டு இந்தக் கட்சியின் முதல் எதிரியாகவுள்ளது முதலாளித்துவம். காரணம், அரசியலை விடவும் பொருளியல் நோக்குகள் முன்னிலைப்படுத்தப்படுவதே! என்றாலும் ரோஹண விஜேவீர, சோமவன்ச மற்றும் இன்றைய தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோரின் விடாமுயற்சிகளும் விழிப்பூட்டல்களும் இக்கட்சிக்கு விடிவைப் பெற்றுத்தரும் நிலையை ஏற்படுத்தியுள்ளதாக இன்றைய கள அளவீடுகள் காட்டத் தொடங்குகின்றன.

தென்னிலங்கை அரசியலில் ஒருகாலத்தில் மூன்றாவது சக்தியாக பார்க்கப்பட்ட இக்கட்சி, "அரகல" ஆர்ப்பாட்டத்தின் பின்னர் உற்சாகமடைந்துள்ளது. முதலாளித்துவ அரசுகளின் பொருளாதாரப் போக்குகள், தூக்குமேடையை நோக்கி நகரும் நிலைக்கு வந்துள்ளமையே இதற்குக் காரணம். இது ஜே.வி.பி க்கு கிடைத்த எழுச்சியே! ஆனாலும், இதற்கு சமாந்தரமாக மாற்று முதலாளித்துவம் (ஐக்கிய மக்கள் சக்தி) வளர்வதைப் பார்க்கின்ற போது மீண்டும் ஜே.வி.பி கைகழுவப்படுமா? இவ்வாறான எண்ணங்களும் அரசியல் களத்தில் அலைமோதுகின்றன.

இக்கட்சிக்கு தென்னிலங்கையில் ஒரு பார்வையும் சிறுபான்மை சமூகங்கள் மத்தியில் இன்னொரு பார்வையும் உள்ளது. பொதுச் சொத்துக்கள், அரச வளங்களை வீணடிக்கும் செயற்பாடுகளை வன்மையாக எதிர்க்கிறது ஜே.வி.பி. தொழிலாளர்களின் நலன்களுக்கு உச்சளவில் குரல்கொடுப்பதில் இக்கட்சியிடம் பாகுபாடுகளே இல்லை. தங்களது பொருளாதாரக் கொள்கையை நிலைநிறுத்த அரசியல் அதிகாரத்தைக் கோருகிறது அவ்வளவுதான்.

இதனால், அரசியல் சித்தாந்தங்களை விடவும் ஜே.வி.பி யின் பொருளியல் கோட்பாடுகள் மத்திய, அடித்தர வர்க்கத்தினரைக் கவர்வது உண்மையே! முஸ்லிம்களின் பார்வையில், வேண்டப்படாத கொள்கையாகவும் தமிழர்களின் சிந்தனையில், உரிமை அரசியலை எதிர்க்கும் கட்சியாகவுமே இன்றளவும் இக்கட்சி உள்ளது. அஞ்சான் உம்மா மற்றும் சந்திரசேகரன் ஆகியோருக்கு எம்.பி. பதவிகளை வழங்கியும் இந்த சிறுபான்மைச் சமூகங்கள் இவர்களைப் புரிவதாக இல்லை.

இன்று இந்நிலைமைகள் மாறி, களம் கைகூடும் காட்சிகள் சிறுபான்மைத் தளங்களிலும் தென்படத்தான் செய்கின்றன. வடக்கு, கிழக்கில் ஓட்டமும் நடையுமாக விரையும் ஜே.வி.பி யை மக்கள் வீரர்களாக இல்லாவிடினும் சாதனையாளர்களாக நோக்கத் தொடங்கியுள்ளனர். காலி முகத்திடலில் சேட்டை மடித்துக்கொண்டும் சுட்டுவிரலை நீட்டியவாறும் ஒரு வீரனைப்போல் அநுரகுமார திஸாநாயக்க ஓடி வந்த காட்சிதான் இவர்களின் களங்களைத் திடப்படுத்துகிறது.

இந்தக் களங்களை உறுதிப்படுத்த சில கொள்கைகளையும் ஜே.வி.பி கைவிட்டுள்ளது. பிரிவினையைத் தூண்டும் மாகாண சபை முறைகளை எதிர்த்த இந்த ஜே.வி.பி இன்று வரவேற்கிறது. சிங்கள மற்றும் தமிழ் தலைமைகள் கூடிப்பேசி இதை அன்று (1988) அறிமுகப்படுத்தியிருந்தால், என்றோ தென்னிலங்கை இந்த அதிகாரப் பகிர்வை புரிந்திருக்கும் என்கிறார் அநுரகுமார திஸாநாயக்க.

முப்பது வருடங்களுக்குப் பின்னரான காலச்சுழற்சியில் சிங்கள, தமிழ் தலைமைகளின் இடைவெளிகள் நீங்கியுள்ளதாக, இவர் இக்கருத்தை அர்த்தப்படுத்துகிறார். அதாவது, ஆயுதக் கட்டமைப்பு அழிந்த பின்னர், தென்னிலங்கையின் அச்சம் நீங்கியுள்ளதாகக் காட்ட எடுக்கப்படும் முயற்சியே இது. தாங்களும் ஒரு காலத்தில் (ஜே.வி.பி) இந்த ஆயுதங்களை ஏந்தியதால், தென்னிலங்கை இதே பார்வையிலும் பயத்திலும் இருந்ததை மறைமுகமாக ஏற்கிறது ஜே.வி.பி. இந்தளவு இக்கட்சி அரசியலில் முதிர்ச்சியடைந்திருப்பது அதிசயம்தான். ஆனால், முதலாளித்துவத்துக்கு இது ஒரு அடியும்தான். கடந்தகாலத் தவறுகளிலிருந்து ஏணிப்படிகள் அமைக்கும் ஜே.வி.பி யின் இந்த முயற்சிகள் முதலாளித்துவத்தின் முதுகெலும்பை முறிக்குமா? அல்லது, சிறுபான்மைச் சமூகங்களில் நிலைப்பட ஜே.வி.பி எடுத்திருக்கும் இந்நிலைமாற்றம், தென்னிங்கையில் தடுமாற்றங்களாகக் காட்டப்படுமா? இதற்கான திராணிகள் மாற்று முதலாளித்துவ அணியிடம் (எஸ்.ஜே.பி) இருக்கிறதா? இல்லை, ஆட்சியிலுள்ள முதலாளித்துவங்கள்தான் இவற்றை விட்டுவைக்குமா?





அரநாயக்க வில்பொல ஜும்ஆ மஸ்ஜித் பரிபாலன சபை தலைவர் தேசமானிய எம்.யூ.பர்சான் முகமட் மற்றும் நிர்வாக குழு அங்கத்தவர்களின் ஏற்பாட்டில்,நல்லிணக்க ஒன்றுகூடல் நிகழ்ச்சி ஒன்று அண்மையில் வில்பொல ஜும்ஆ மஸ்ஜிதில் நடைபெற்றது. மௌலவி அஷ்சேக் அம்ஹர் ஹகம்தீன் அவர்களின் மார்க்கப் போதனைகளோடு ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில் இப்பகுதியைச் சேர்ந்த மதத்தலைவர்கள்,அரநாயக்க பிரதேச சபை தலைவராக இருந்து,முஸ்லிம் சமய பணிப்பாளராக பதவி ஏற்றுள்ள பணிப்பாளர் பைசல் ஆப்தீன்,பொலிஸ் அதிகாரிகள்,சுகாதார அதிகாரிகள்,கிராம சேவை அதிகாரிகள் என முக்கிய பிரமுகர்கள் கலந்து சிறப்பித்ததை இங்கு காணலாம். (அரநாயக்க விஷேட நிருபர் பாரா தாஹீர்)









இலங்கையின் 75வது சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பு 12 பீர்சாஹிப் ஜும்ஆப் பள்ளிவாசல், இஹ்ஸானியா அறபுக் கல்லூரி மற்றும் நியாஸ் மௌலவி பவுண்டேசனும் இணைந்து வழமைபோன்று இம்முறையும் தேசிய தின நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. நியாஸ் மௌலவி பவுண்டேசனின் பணிப்பாளர் மௌலவி லமீர் ஹாபிஸ் தலைமையில் நேற்றுக் காலை இடம் பெற்றது. இந்நிகழ்வில் கொழும்பு மாவட்ட பள்ளிவசல்களின் சம்மேளனத் தலைவர் சட்டத்தரணி சிராஸ் நூர்டீன் பிரதம அதிதியாகவும் கௌரவ அதிதிகளாக கொழும்பு மாநகர சபையின் பிரதி மேயர் ஐ.எம்.இக்பால், கெசல்வத்த பொலிஸ் நிலையத்தின் பிரஜா பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி டபிள்யு. நந்தசேன, பள்ளிவாசல்களின் சம்மேளனத்தின் அங்கத்தவர்கள், ஏனைய பள்ளிவாசல்களின் பிரதிநிதிகள், அகில இலங்கை ஜமிய்யதுல் உலமா பிரதிநிதிகள், பிரதேச பாலர் பாடசாலை சிறார்கள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டிருந்தனர். (ஏ.எஸ்.எம்.ஜாவித்)

# 13 ஒழித்துக்கட்ட முயற்சி!



எம்.எஸ். அமீர் ஹுசைன்



ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா 2023.01.26 ஆம் திகதி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு என்ற கருப்பொருளின் அடிப்படையில் சர்வ கட்சி மாநாடொன்றை கூட்டியுள்ளார். இந்த சர்வ கட்சி மாநாட்டில் அரசியல் அமைப்பிற்கான 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் தமிழ் மக்கள் அரசியல் ரீதியாக எதிர்நோக்குகின்ற நெருக்கடிகள், பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடல் ஒன்றை செய்துள்ளார். அதே நேரம் முஸ்லிம் சமூகம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் பேச்சுவார்த்தை நடத்தப்பட இருக்கின்றது என்ற தகவலையும் ஜனாதிபதி அறிவித்துள்ளார். அண் மையில் கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் நூ ற்றாண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை வெளிப் படுத்தினார்.

கொழும்பில் வாழும் மக்களின் பிரச்சினை ஒருவிதம், இலங்கையின் தென் கிழக்கு பிரதேச முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளில் இருந்து வடக்கில் வாழும் முஸ்லிம்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் வேறு என்ற அடிப்படையில் குறிப்பிட்டு இவை அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் முஸ்லிம் சமூகத்துடன் கலந்துரையாடப்படும் என்று குறிப்பிட்டார். அதே போன்று மலையக இந்திய வம்சாவளி தமிர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்படும். அவர்களது பிரச்சினைகள் தேவைப்பாடுகள் தொடாடபாகவும் கவனம் செலுத்தப்படும் என்ற விடயத்தையும் ஜனாதிபதி சூளுரைத்துள்ளார்.

1987 ஆம் ஆண்டு ஜூலை 29 ஆம் திகதி செய்துகொள்ளப்பட்ட இலங்கை இந்திய உடன்படிக்கைக்கு அமைவாக உருவாக்கப்பட்டதே அரசியல் அமைப்பிற்கான 13 ஆவது திருத்தமும் அதிகாரப்பரவலாக்களை மையப்படுத்தி மாகாண சபைகள் முறையுமாகும். அதன் பின்னர் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்தனா காலம் முதல் உடனடியாக அமுலாகும் வகையில் வக்கு கிழக்கு மாகாண சபை உட்பட 09 மாகாண சபைகள் உருவாக்கப்பட்டது. இந்த 13 ஆவது திருத்தத்தை அடியொட்டிய அதிகாரப்பரவலாக்கம் தொடர்பாக காலத்திற்கு காலம் பலவிதமான முரண்பாடான சூழ்நிலைகளும் கருத்து முரண்பாடுகளும் இருந்தே வந்துள்ளன. இந்த 13 ஆவது திருத்தம் நடைமுறைக்கு வந்து இன்றைக்கு 36 வருடங்களாகின்றன. 36 வருடங்கள் கடந்தும் இன்னும் இந்த 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தவது பற்றிய விடயம் பேச்சளவிலே இருந்து வருகின்றது.

முழுமையாக 13 யை அமுல்படுத்தவதென்பது மகாண சபைகள் முறையின் கீழ் சொல்லப்பட்டிருக்கின்ற பொலீஸ், காணி, வெளிநாட்டு உறவு அதிகாரங்களையும் இந்த மாகாண சபைகளுக்கு வழங்க வேண்டும். அதன்படி வடக்கு மாகாண சபைக்கும் இதே அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். ஆனாலும் 13 ஆவது திருத்தம் நடைமுறைக்கு வந்த அன்றைய நாள் முதல் இன்று வரையில் அந்த மூன்று அதிகாரங்களையும் வடக்கு மாகாண சபைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் பின்னடித்து வருகின்றது. அதனை முழுமையாக பெற்றுக்கொள்வதோடு பூரண அதிகாரத்துடனான மாகாண சபைகள் முறையொன்றை எதிர்பார்ப்பதே 13 பிளஸ் என்ற அடிப்படையில் காலத்திற்கு காலம் தமிழர் விடுதலைக் கூட்டணி, பல தமிழ் அரசியல் கட்சிகளை உள்ளடக்கிய தமிழர் விடுதலைக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன.

ஏற்கனவே இனப்பிரச்சினை உக்கிரமாக இருந்த காலகட்டத்தில் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்தன திம்பு பேச்சுவார்த்தை, சர்வகட்சி மாநாடு என்று பல கலந்துரையாடல்களை செய்தார். அதே போன்று ஜனாதிபதியாக இருந்த ஆர். பிரேமதாசா, சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்க, டி.பி. விஜேதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரும் இதே 13 யை வைத்துக்கொண்டே அரசியல் நடத்தி வந்தனர். சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கா அரசியல் அமைப்பிற்கான 13 ஆவது திருத்தத்தை மேலும் கூடுதலான அதிகாரங்களுடன் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்து அதற்கான திருத்தத்தை 1996 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து இரண்டு நாட்களாக விவாதம் நதத்திய பின்னர் நாட்டில் சிங்கள தீவிரவாதிகளால் குழப்பம் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து சுருட்டி குப்பைத் தொட்டியில் போட வேண்டி ஏற்பட்டது.

தொடர்ச்சியாக 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தும் நடவடிக்கை என்று பதவியில் இருக்கின்ற அரசாங்கங்கள் ஏதாவது நடவடிக்கைகளை எடுத்தால் மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுவது போன்று சிங்கள தீவிரவாதமும் தேசப்பற்றாளர்களும் வீதிக்கு இறங்கி எதிர்ப்பை வெளிப்படுத்துவது மரபாக மாறி இருக்கின்றது. 13 யை முழுமையாக நடைமுறைக்கு கொண்டு வந்தால் வட மாகாண சபை ஊடாக நாடு இரண்டாக பிளவுபடும். வடக்கில் தமிழர் தாயகம், சுய நிர்ணய உரிமை என்ற அடிப்படையில் தனிநாடு உருவாகலாம் என்ற அச்சம் நாட்டில் வாழும் சிங்கள பௌத்த சமூகத்தின் மத்தியில் ஏற்படுத்தப்பட்டு அச்சமூட்டப்படுகின்றது. தேர்தல் காலம் வரும் போது அதுவே தேர்தல் பிரச்சாரமாகவும் மாறி வருகின்றது. இவ்வாறான ஒரு பின்னணியில் தான் தேசப்பற்றை முன்வைத்து 2019 ஆம் அண்டு கோதாபய ராஜபக்ஷ 66 இலட்சம் வாக்குகளைப் பெற்று பதவிக்கு வந்தார். அந்த மமதையில் தான் சிங்கள மக்களின் தலைவர் என்றும் சிங்களவர்கள் நினைப்பதை மாத்திரமே செய்வேண் என்றும் தனது முதலாவது கண்ணி உரையில் கூறும் அளவிற்கு தீவிரவாதியாக மாறி இருந்தார்.

தமிழர் வாக்குகளை சூரையாடி அதிகாரத்தை கைப்பற்றவதற்காக 13 இன் அடிப்படையில் அதிகாரத்தை முழுமையாக அமுல்படுத்துவோம் என்று பிரச்சாரம் மேற்கொளள்ப்படுகின்றது போன்று பெரும்பான்மை சிங்கள சமூகத்தின் ஒட்டுமொத்த வாக்குகளையும் சூரையாட நாடு பிளவுபடுவதில் இருந்து பாதுகாக்க வேண்டும், தனிநாடு உருவாகாமல் ஐக்கிய இலங்கை என்ற சித்தாந்தம் என்ற கருத்தை முன்வைப்பது இலங்கையின் ஆட்சியில் தந்திரோபாயமாக மாறி வருவதே கடந்த 36 வருடங்களாக இடம்பெற்று வருகின்ற விடயமாகும். இவ்வாறான ஒரு பின்னணியில் தான் மீண்டும் இன்றை ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா தமிழ் தரப்பினருடன் நடத்தி வரும் பேச்சுவார்த்தைகளும் அமைகின்றது.

ஆனாலும் இந்தியா அடிக்கடி இந்த 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்து வருகின்றது. இலங்கைக்கு கடன் நிவாரண உதவிகள், இந்தி வீட்டுத் திட்டம் என்றும் ஏனைய உதவிகளை வழங்கிய சந்தர்ப்பங்களிலும் இலங்கை அரசாங்கத்துடன் பேச வந்த ஒவ்வொரு பிரதிநிதியும் இதனை வலியுறுத்துவதை மரபாக செய்து வருகின்றனர். மாகாண சபைகள் முறையை நடமுறைப்படுத்தும் போது 13 யை பூரணமாக நடைமுறைக்கு கொண்டு வருவதன் மூலம் காணி பொலீஸ் அதிகாரங்களை பெறுவதை உறுதிப்படுத்த வடக்கை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் கட்சிகளும் இந்தியாவின் பொறுப்பாகவே கருதி அலுத்தங்களை கொடுக்கும் போதே இந்தியா இந்த விடயத்தில் தலையீடு செய்து அவ்வப்போது வருகின்ற ஆட்சியாளர்களை தூண்டுகின்றது.

ஆனால் அவை அனைத்தும் வெறும் பேச்சளவிலான நாடமாகவே இருந்து வந்திருக்கின்றது.

அந்த வகையில் பார்க்கும் போது 13 யை முழுமையாக நடைமுறைக்கு கொண்டுவருவதென்பதானது வெறும் கண்துடைப்பாகும். கடந்த 25 ஆம்ம திகதி நடைபெற்ற சர்வகட்சி பேச்சுவார்த்தையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முன்னால் பொலீஸ் மற்றும் பாதுகாப்பு அமைச்சராக இருந்த சரத் வீரசேகர கருத்து வெளியிடுகைளில் 13 யை முழுமையாக அமுபடுத்தினால் நாடு இரண்டாக பிளவுபட்டு வடக்கில் தனிநாடு உருவாகும் சில பிரிவுகள் இருக்கின்றன. அதனால் ஐக்கிய இலங்கை என்ற சித்தாந்தத்திற்கு பாதிப்பு ஏற்படலாம் என்றார். அத்துடன் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்காவும் குறித்த சர்வ கட்சி மாநாட்டில் பேசும் போது இந்த 13 வேண்டாம் என்றால் சொல்லுங்கள் 222 ஆவது திருத்த்தை கொண்டு வந்து அதனை நீக்கிவிடுவோம் என்ற கேள்வியையும் முன்வைத்தார்.

ஏற்கனவே மாகாண சபைகளின் பதவிக்காலம் முடிவடைந்து இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் இதுவரையில் தேர்தல் நடத்தப்படாமல் மாகான ஆளுனர்களின் கீழ் நிர்வாகம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இப்போது இந்த சர்வ கட்சி மாநாட்டில் 13 தொடர்பாக பேசப்பட்ட விடயம் தற்போளாய நிலையில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடைபெற்றால் தேர்தல் பிரச்சார மேடையில் முக்கிய பாத்திரத்தை பெறும் கருப்பொருளாக மாற இடம் இருக்கின்றது. 13 மூலம் தமிழருக்கு மேலதிக அதிகாரங்களை வழங்கி நாட்டை பிளவுபடுத்த மயற்சி என்று சுலோகமாக மாற்ற சிங்கள தீவிரவாதத்திற்கு சந்தர்ப்பத்தை வழங்குவதாக அமைகின்றது.

நாரஹேன்பிடி அபயாராமயவுக்கு கடந்த 27 ஆம் திகதி முன்னால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விஜயம் செய்தபோது முருத்தெட்டுவே ஆனந்த தேரரின் முன்னிலையில் பேசிய அபயாராம தேரர் 13 ஆமல்படுத்தப்பட்டால் பிக்குமார் அதற்கு எதிராக வீதிக்கு இறங்கி போராட்டம் நடத்த தயாராக இருப்பதாக அறிவித்தார்.

இவ்வாறாக காலத்திற்கு காலம் தமிழர்களுக்கு எதிர்பார்ப்புக்களை வழங்கி ஏமாற்றி வருகின்ற நாடகம்தான் அரங்கேற்றப்படுகின்றது. அத்துடன் அரசாங்கம் இந்த 13 யை முழுமையாக நடைமுறைக்கு கொண்டு வர முயற்சி எடுக்கின்ற போது கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் தொடர்பாகவும் பல பிரச்சினைகள் எழுகின்றது. அதில் காணி அதிகாரம் தொடர்பாக சந்தேகங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அதனால் 13 தொடர்பாக கிழக்கு மாகாண முஸ்லிம் தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு பிரச்சினைகள் பேச்சுவார்த்தை மேசையில் திட்வட்டமாக கலந்துயையாடப்பட வேண்டும் என்று கோரிக்கைகள் முன்வை க்கப்பட்டு வருகின்றதையும் புரக்கணிக்க முடியாது. எவ்வாறோ ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்காவின் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு முயற்சியானது மற்றுமொரு ஏமாற்று நாடகமாக அல்லது எதிர்வரும் தேர்தலில் தாமரை மொட்டு ஐக்கிய தேசிய கட்சி கூட்டணியை வெற்றி பெற தமிழர் வாக்குகளை சுருட்டி எடுக்கும் தேர்தல் தந்திரோபாயமாக அமையக்கூடாது. எந்த பேச்சுவார்த்தையாக இருந்தாலும் கடந்த 36 வருடங்களாக தொடரும் ஏமாற்று வித்தை போன்று இருக்கக் கூடாது. பிரச்சினைகளுக்கான தீர்வு என்று வருகின்ற போது இலங்கை ஒரு பல்லின சமூகங்களை, கலாச்சாரத்தை, அரசியல் அபிலாசைகளைக் கொண்ட நாடு என்ற அடிப்படையிலேயே அனைத்தும் வெளிப்படையாக முன்னெடுக்கப்பட வேண்டும்.



அப்ரித் வஸீர்




# கால்பந்தாட்ட உலகின் நாயகன் கிறிஸ்டியானோ ரொனால்டோ!

கிளப் போட்டியோ, தேசிய அணிக்காக சர்வதேச ஆட்டமோ எதுவாக இருந்தாலும் கிறிஸ்டியானோ ரொனால்டோவிடம் இருந்து கோல்கள் வந்து கொண்டே இருக்கும். அவர் உச்சக்கட்ட ஃபார்மில் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அதில் எந்த மாற்றமும் இருக்காது,"

2013ஆம் ஆண்டு ஐரோப்பிய கோப்பை கால்பந்து தொடரின் கோல்டன் ஷூ விருது விழாவில் ரொனால்டோவுடன் சம காலத்தில் கால்பந்து உலகை ஆதிக்கம் செலுத்தும் லியோனல் மெஸ்ஸியின் வார்த்தைகள் இவை.

இப்படியாக, கோல் மிஷின் எனப் பெயரெடுத்த ரொனால்டோவுக்கு இன்று 38வது பிறந்தநாள்.

## ரொனால்டோ என்ற பெயர் வந்தது எப்படி?

விளையாட்டை ஜாலியாக விளையாடுவோர் உண்டு, ஆக்ரோஷத்துடன் விளையாடுவோரும் உண்டு. இரண்டாமவர் வெற்றிக்காக இறுதிவரை போராடுவோர். கிறிஸ்டியானோ ரொனால்டோ, இரண்டாவது வகை!

போர்த்துக்கலுக்கு சொந்தமான மதீரா தீவுகளில் ஃபுஞ்சால் என்ற இடத்தில் பிறந்த ரொனால்டோவுக்கு சிறு வயதிலேயே உலகின் சிறந்த கால்பந்து வீரனாவது லட்சியமாகி விட்டிருந்தது. அவரது தந்தை ஜோஸ் அவெய்ரோ, அங்குள்ள அன்டோரினா என்ற கிளப்பில் உதவியாளராகப் பணிபுரிந்தவர்.

ரொனால்டோவின் தந்தை அமெரிக்க நடிகர், அதிபர் ரொனால்ட் ரீகன் ரசிகர் என்பதால்தான், ரொனால்டோ என்ற இரண்டாம் பெயரை சூட்டினார். ஆனால், ரொனால்டோவின் நாட்டமோ கால்பந்து மீது இருந்தது.

தனது 10 வயதிலேயே அவர் தனித்துவத்துடன் கால்பந்து விளையாட ஆரமித்தார். உலகின் சிறந்த கால்பந்து வீரனாக வேண்டுமெனக் கனவு கண்ட ரொனால்டோ, அதற்காக மிக இளம் வயதிலேயே கடினமாக உழைக்கத் தொடங்கிவிட்டார்.

## கனவுகளைத் துரத்திய சிறுவனாக..!

அந்த வயதில்கூட, "கால்பந்து வீரனாவேன், சர்வதேச போட்டிகளில் ஆடுவேன்" என்றெல்லாம் அவர் கூறியதே கிடையாது. "உலகின் மிகச் சிறந்த கால்பந்து வீரனாவேன்," என்ற வார்த்தைகள் மட்டுமே ரொனால்டோவிடம் இருந்து உறுதிபட வெளிப்படும்.

சிறுவனாக, நேசினோல் அணிக்காக ஆடிய போதே ரொனால்டோவின் அந்த மனப்பாங்கு வெளிப்பட்டது. தன்னைவிட வயதில் பெரிய வீரர்களைக் கண்டு சிறிதும் அவர் கலங்கியதே இல்லை. களத்தில் பம்பரமாகச் சுழலும் அவர், அப்போதே கோல் அடிப்பதில் குறியாக இருந்தவர். எப்போதும் தன் ஆட்டத்திறனையே உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருப்பவர். அதைத் தொடர்ந்து மேம்படுத்த எத்தகைய உழைப்பையும் கொடுக்க சித்தமாக இருப்பவர்.

நேசினோல் அணிக்காக ரொனால்டோ ஆடிய விதத்தைக் கண்ட ஸ்போர்ட்டிங் லிஸ்பன் அணி அவரை ஒப்பந்தம் செய்தது. 16 வயதுக்கு உட்பட்டோருக்கான அணியில் 14 வயதிலேயே இடம் பிடித்தார் ரொனால்டோ.

ஆனாலும், வயதில் மூத்த வீரர்களையும்கூட ஆதிக்கம் செய்ய முனையும் மனப்பாங்கு அவரிடம் இருந்தே வந்திருக்கிறது. சிறுவனாக இருந்த போதே ரொனால்டோவை துரத்திய கனவும் லட்சியமும், அவர் எதற்கும் அஞ்சாமல் களத்தில் துணிச்சலாகச் செயல்படத் தூண்டுகோலாக அமைந்தன.

## கால்பந்து உலகம் கண்டு கொண்ட தருணம்!

2003ஆம் ஆண்டு இங்கிலீஷ் பிரீமியர் லீக்கில் புகழ் பெற்ற அணிகளில் ஒன்றான மான்செஸ்டர் யுனைடெட் அணிக்கு ஒப்பந்தமான பிறகே, ரொனால்டோவின் திறமையை உலகம் அறிந்து கொண்டது.

அப்போது கால்பந்து உலகில் கொடிகட்டிப் பறந்த ரொனால்டோ, ரொனால்டினோ, ஜிடேன் ஆகிய பெருந்தலைகளுடன் கிறிஸ்டியானோவும் உடனடி சென்சேஷனாக மாறிப் போனார். கால்பந்து உலகின் மிகச் சிறந்த முன்கள வீரர்களில் ஒருவராக அவர் தன்னைத் தகவமைத்துக் கொண்டார்.

2007-08வது சீசன் அவருக்கு மிகவும் வெற்றிகரமாக அமைந்தது. பிரீமியர் லீக்கில் அசத்திய ரொனால்டோ, மான்செஸ்டர் யுனைடெட் அணி சாம்பியன்ஸ் லீக் பட்டத்தை வெல்ல முக்கிய காரணமாகத் திகழ்ந்தார். இதன் காரணமாக, 2008ஆம் ஆண்டு உலகின் மிகச் சிறந்த கால்பந்து வீரருக்கு வழங்கப்படும் பேலோன் டோர் விருதை அவர் முதன்முதலாக வென்றார்.

அடுத்த ஆண்டும் மான்செஸ்டர் யுனைடெட் அணியை சாம்பியன்ஸ் லீக் தொடரின் இறுதிப் போட்டி வரை அழைத்துச் சென்றார் ரொனால்டோ. இறுதிப் போட்டியில் மெஸ்ஸியின் பார்சிலோனா அணியிடம் தோல்வியடைந்து கோப்பை வெல்லும் வாய்ப்பை இழந்தது மான்செஸ்டர் யுனைடெட்.

இதைத் தொடர்ந்து, ஸ்பெயின் உள்நாட்டு கால்பந்து தொடரான லா லிகாவில் ஆடும் புகழ் பெற்ற கிளப்பான ரியல் மாட்ரிட் அணி ரொனால்டோவை வாங்கியது.

## கால்பந்து உலகில் ரொனால்டோ VS மெஸ்ஸி

அது முதல் கால்பந்து உலகில் இன்று வரை உச்சரிக்கப்படும் ரொனால்டோ - மெஸ்ஸி போட்டி தொடங்கியது. ரியல் மாட்ரிட் அணிக்காக ரொனால்டோ ஆடிய காலம், கால்பந்து வாழ்க்கையில் அவர் உச்சத்தில் இருந்த கால கட்டம்.

உலகம் முழுவதுமே கால்பந்து ரசிகர்கள் ரொனால்டோ - மெஸ்ஸி இருவரில் யார் சிறந்தவர் என்று பிரிந்து விவாதித்துக் கொள்ளும் அளவுக்குப் போட்டி கடுமையாக இருந்தது.

ரொனால்டோ - மெஸ்ஸி ரசிகர்களிடையே அடி-தடி அளவுக்குக்கூட மோதல்கள் ஏற்பட்டுள்ளன. அந்த அளவுக்கு ரொனால்டோ - மெஸ்ஸி மோதல் உலகப் பிரசித்தம்.

கால்பந்து உலகமே ரியல் மாட்ரிட் - பார்சிலோனா அணிகள் மோதும் ஆட்டத்தை ஆவலுடன் எதிர்நோக்கியிருந்த காலம் அது. மைதானம் ரசிகர்களால் நிரம்பி வழிவது மட்டுமல்ல. அந்தப் போட்டியை நேரலையில் காணவும் டி.வி. முன் ரசிகர்கள் தவம் கிடந்தனர்.

## மெய் சிலிர்க்க வைக்கும "பைசைக்கிள் கிக்", "ஹெட்டிங்"

தன் கால்களுக்கு பந்து கிடைத்ததும் கோல் கம்பத்தை நோக்கி விரையும் ரொனால்டோவின் மின்னல் வேகம், எதிரணி தற்காப்பு வியூகத்தை உடைக்கும் அவரது ஆட்ட நுணுக்கம், எதிரணி வீரர்களை டிரிபிள் செய்யும் திறமை, எல்லாவற்றுக்கும் மேலாக "பைசைக்கிள் கிக்" மூலம் கோல் அடிக்கும் சாகசம் என கால்பந்து ரசிகர்கள் அவரை கொண்டாடித் தீர்ப்பார்கள்.

காற்றில் பறந்து வரும் பந்தை ஹெட் செய்ய அவர் காற்றிலேயே பறப்பதைப் பார்த்து கால்பந்து உலகமே மிரளும். பெனால்டி வாய்ப்புகளை கோலாக மாற்றுவதில் தன்னிகரற்ற வீரர் இவர்.

2018ஆம் ஆண்டு வரை ரியல் மாட்ரிட் அணிக்காக விளையாடிய கிறிஸ்டியானோ ரொனால்டோ 292 ஆட்டங்களில் 311 கோல்களை அடித்திருந்தார் என்பதே அவரது சிறப்பான ஆட்டத் திறனுக்குச் சான்று.

2018ஆம் ஆண்டு ஜூலையில் இத்தாலியின் யுவெண்டஸ் அணிக்காக அவர் ஒப்பந்தமானார். அந்த அணிக்காக 3 ஆண்டுகள் ஆடிய ரொனால்டோ, சீரி ஏ கோப்பை, சூப்பர்கோப்பா இட்டாலியானா, கோப்பா இட்டாலியானாவை வெல்ல உதவினார்.

## வரலாறு காணாத ஊதியத்துடன் அல்-நாசர் அணிக்கு ஒப்பந்தம்

சுமார் 18 ஆண்டுகளுக்குப் பிறகு 2021ஆம் ஆண்டு மான்செஸ்டர் யுனைடெட் அணிக்காக அவர் மீண்டும் ஒப்பந்தமானார். இது ரொனால்டோ, மான்செஸ்டர் யுனைடெட் ஆகிய இரு தரப்புக்குமே ஏமாற்றமாக அமைந்தது.

உள்ளுக்குள் புகைந்த அதிருப்தி ரொனால்டோவின் பேட்டியால் பகிரங்கமாக வெடிக்க, 2022ஆம் ஆண்டு நவம்பரில் மான்செஸ்டர் யுனைடெட் அணியில் இருந்து அவர் வெளியேறினார்.

கால்பந்து உலகம் இதுவரை காணாத அளவில், ஆண்டுக்கு சுமார் 1,775 கோடி ஊதிய ஒப்பந்தத்தில் சௌதி அரேபியாவை சேர்ந்த அல்-நாசர் அணியில் இணைந்தார்.

"ஐரோப்பாவில் மிக முக்கியமான முன்னணி அணிகளுடன் விளையாடிவிட்டேன். அங்கு அனைத்தையும் வென்றுவிட்டேன். ஆசியாவில் இது புதிய சவால்," என்று அவர் குறிப்பிட்டார்.

## போர்த்துக்கல் அணிக்கு புகழ் சேர்த்த ரொனால்டோ!

போர்த்துக்கல் தேசிய அணிக்கும் ஒரு சிறந்த வீரராக, கேப்டனாக அவர் நல்ல பங்களிப்பைத் தந்துள்ளார். 2003ஆம் ஆண்டு தனது 18 வயதில் போர்த்துக்கல் அணிக்காக சர்வதேச அரங்கில் கால் பதித்த ரொனால்டோ, அது முதல் அணியின் தவிர்க்க இயலாத வீரராகிப் போனார்.

2006ஆம் ஆண்டு உலகக் கோப்பையில் போர்த்துக்கல் அணி நான்காவது இடத்தைப் பிடித்ததில் ரொனால்டோவின் பங்கு அளப்பரியது. 2008ஆம் ஆண்டு உலகக் கோப்பை முதல் போர்த்துக்கல் அணிக்கு தலைமை தாங்கி அந்த அணியை சர்வதேச அரங்கில் சிறப்பான உயரத்திற்கு அவர் அழைத்துச் சென்றார்.

2012ஆம் ஆண்டு அவரது மகத்தான ஆட்டம் ஐரோப்பிய சாம்பியன்ஷிப் தொடரில் போர்த்துக்கல் அணியை அரையிறுதி வரை அழைத்துச் சென்றது.

2016ஆம் ஆண்டு ஐரோப்பிய சாம்பியன்ஷிப் கோப்பையை போர்த்துக்கல் அணிக்கு வென்று கொடுத்தார் ரொனால்டோ. 2018ஆம் ஆண்டு உலகக் கோப்பையிலும் அவரது சிறப்பான ஆட்டம் தொடர்ந்தது.




கத்தாரில் அண்மையில் நடந்து முடிந்த உலகக் கோப்பை, அவருக்கு ஏமாற்றம் தருவதாக அமைந்தது. இருந்த போதிலும், அந்தத் தொடரிலும் கோல் அடித்த ரொனால்டோ, 5 உலகக்கோப்பை தொடர்களில் கோலடித்த ஒரே வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

கால்பந்தில் உலகம் போற்றும் வீரராகத் திகழ்ந்தாலும் ரொனால்டோ அவ்வப்போது சர்ச்சைகளில் சிக்கியதும் உண்டு. "சுயநலத்துடன் ஆடுகிறார், அடுத்தவருக்கு வாய்ப்பு தராமல் தானே கோலடிக்க முனைகிறார், வரி ஏய்ப்பு செய்தார்" என்பன மட்டுமல்ல, "பாலியல் குற்றச்சாட்டுகளும்" கூட அவர் மீது எழுந்தது உண்டு.

ஆனாலும், அவற்றையெல்லாம் தாண்டி உலகம் முழுவதும் கால்பந்து ரசிகர்களிடையே பெரும் அபிமானத்தை அவர் சம்பாதித்துள்ளார்.

2021ஆம் ஆண்டு ஐரோப்பிய சாம்பியன்ஷிப் தொடரில், செய்தியாளர் சந்திப்பின்போது, தன் முன்னே வைக்கப்பட்டிருந்த ஸ்பான்சர்ஷிப் பானமான கொகோகோலா பாட்டில்களை ரொனால்டோ சற்று ஓரமாக தள்ளி வைத்துவிட்டு, தண்ணீர் குடியுங்கள் என்று துணிச்சல் காட்டினார்.

ரொனால்டோவின் இந்த செய்கையால், பங்குச் சந்தையில் கொகோ கோலாவின் மதிப்பு பெரும் வீழ்ச்சி கண்டது என்பது வரலாறு. அந்த அளவுக்கு மனிதருக்கு ரசிகர் பட்டாளம் உண்டு.

சமூக ஊடகங்களில் முடிசூடா மன்னர் ரொனல்டோதான். இன்ஸ்டாகிராமில் 60 கோடி பேரும், ஃபேஸ்புக்கில் 15.5 கோடி பேரும், ட்விட்டர் தளத்தில் 10.5 கோடி பேரும் ரொனால்டோவை பின்தொடர்கின்றனர். இன்றளவும்கூட, விளம்பரங்கள் வாயிலாக அதிக வருவாய் ஈட்டும் கால்பந்து வீரர்களில் அவரே முதலிடம்.

கால்பந்தாட்டத்தில் உடல் தகுதியை எப்போதும் பேணிக் காப்பது அவசியம். அந்த வகையில் கிறிஸ்டியானோ ரொனால்டோ எப்போதுமே தன்னை முதலிடத்தில் இருக்குமாறு உழைப்பார்.

நடிகரும், பாடி பில்டருமான அர்னால்ட் கூறுகையில், "ரொனால்டோ போன்ற ஃபிட்டான விளையாட்டு வீரரை நான் பார்த்ததே இல்லை," என்று கூறுகிறார்.

ரொனால்டோ மது அருந்துவது இல்லை. அவருடைய இந்த பிட்னெஸ்க்கு மதுவை தவிர்த்தது முக்கிய காரணம் என்று அடித்துக் கூறுகிறார். அதே போல டாட்டூ குத்துவதும் அவருக்கு அறவே பிடிக்காது.

தனிப்பட்ட வாழ்க்கையில் சிறந்த மனிதராக இருக்கிறார் ரொனால்டோ. இதன் காரணமாகவே அவர் மீது பலருக்கு நன்மதிப்பு உண்டு. தாயின் மீது அதிக பாசம் கொண்டவர், இப்போதும் தாயை கவனித்துக் கொள்கிறார். அவ்வபோது அவர் தனக்காக பட்ட துன்பங்களை எல்லாம் நினைவு கூறுவார்.

5 முறை பேலோன் டோர் விருது, கிளப் போட்டிகளில் அதிக கோல்கள், சமூக ஊடகங்களில் அதிகம் பேரால் பின்தொடரப்படுபவர் என்று பல்வேறு சிறப்புகளை உடையவர் ரொனால்டோ.

கால்பந்தில் அடுத்த சூப்பர் ஸ்டாராக கொண்டாடப்படும் கிலியன் எம்பாப்பே, தனது முன்மாதிரியாகக் கருதியது ரொனால்டோவையே.

கால்பந்திலும் சரி, தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி, உலகின் கோடிக்கணக்கான இளைஞர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்பவர் ரொனால்டோ.

இன்று 38வது பிறந்தநாளை கொண்டாடும் ரொனால்டோவுக்கு உலகம் முழுவதும் இருந்து வாழ்த்து மழை பொழிந்த வண்ணம் இருக்கிறது.